1st April 1963]

களுக்கு ஸ்காலர்ஷிப் இல்லை என்ற நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதனால் பல பையன்கள் அவர்களுடைய படிப்பை முடிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகையால், இந்த ஆண்டு ஸ்காலர் ஷிப் கொடுக்கப்படாவிட்டாலும் அவர்களுக்குக் கடன் கொடுக் கவாவது அரசாங்கம் ஏதாவது வழிவகை **செய்யுமா?**

கனம் திரு. பூ. கக்கன்: கடன் கொடுப்பதற்கு ஏற்பாடு செய் வதைக் காட்டிலும் இனமாகக் கொடுத்தால் நல்லது என்றுதான் இப்போது பரிசீலனை செய்துகொண்டிருக்கிறோம். எஸ்.எஸ்.எல்.சி, படித்துவிட்டு பி.யூ.சி.-க்குப் போய்விடுகிறார்கள். அவர்கள் அங்கு பெயிலான பிறகு மறுபடியும் பாலிடெக்னிக் சேர வருகிறார்கள். அதனால் சில சமயங்களில் இந்த ஸ்காலர்ஷிப் கொடுப்பதில் ஆடிட் அப்ஜெக்ஷன் இருந்தது. அப்படிப்பட்டவர்களுக்கு ஸ்காலர் ஷிப் கொடுக்க முடியாது என்று சொன்னார்கள். பி.யூ.சி. படித்துவிட்டு பாலிடெக்னிக் போனால் ஸ்காலர்ஷிப் கொடுப்பதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறார்கள். சானிட்டரி இன்ஸ்பெக்டர் கோர்ஸுக்குப் போகிறவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுப்பதா என்பதைப் பின்னால்தான் பரிசீலனை செய்ய வேண்டும்.

கழிவுநீர்க்கால் திட்டம் (திருவாரூர்)

* 438 கேள்வி.—**திரு. சி. ம. அம்பிகாபதி:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

திருவாரூர் நகருக்கான சாக்கடைத் திட்டம் எந்த நிலை யிலுள்ளது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அத்தகைய திட்டம் எதுவும் தற்போது அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

There is no such proposal under consideration of the Government at present.

Malaria Eradication Programme

* 445 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state:

(*a*) the number of officials employed for the implementation of the Malaria Eradication Programme in Madras State; and

(*b*) whether they will be paid the pay and allowances like N.G.O's?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) Under the National Malaria Eradication Programme the following staff are employed:—

(i) Gazetted 37 (Five posts not filled up).

(ii) Non-Gazetted technical and ministerial staff 10,701 (Thirty posts not filled up).

[1st April 1963

(b) Out of the staff referred to in item (ii) above, the staff paid from contingencies are allowed only fixed pay and they are given the increase in Dearness allowance of Rs. 5 sanctioned in July 1962. Other regular staff are in receipt of prescribed pay and Dearness allowance.

(அ) மலேரியா ஒழிப்புத் தேசியத் திட்டத்தின் கீழ்ப் பின் வரும் பணியாளர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர் :—

(1) கெஜெட் பதிவு பெற்றவர் 37 (ஐந்து பதவிகள் நிரப்பப் படவில்லை).

(2) கெஜெட் பதிவு பெறுதவர்கள் (தொழிற்துறையைச் சார்ந்தவர், சாராதவர்) 10,701 (முப்பது பதவிகள் நிரப்பப்பட வில்லை).

(ஆ) (2) இனத்தில் குறிப்பிட்ட பணியாளர்களில் சில்லறைச் செலவு நிதியிலிருந்து சம்பளம் பெறும் பணியாளர் களுக்கு நிலையான சம்பளம் மட்டுமே கொடுக்கப்படுகிறது. 1962 ஜூலையில் அனுமதித்த ரூ. 5 அகவிலைப்படி உயர்வும் கொடுக்கப் படுகிறது. முறையாக அமர்த்தப்பட்ட இதர பணியாளர்கள் நிர்ணய சம்பளத்தையும் அகவிலைப் படியையும் பெற்று வருகின் றனர்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, இந்தப் பதவிகள் நிரப்பப்படாததற்குக் காரணமென்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஆட்கள் வராததுதான் காரணம். போஸ்ட் அட்வர்டைஸ் பண்ணியும் ஒருவரும் மனு செய்யவில்லை.

திரு. கோ. சி. மணி : அந்த பதவிகளுக்கு ஒருவரும் வரவில்லை என்பதற்குக் காரணமென்ன என்பதை அரசாங்கம் தீர ஆராய்ந் திருக்கிறதா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதை அரசாங்கம் ஆராயவில்லை. கனம் அங்கத்தினர் அவர்களிடம் யாராவது 'ரெப்ரசென்ட்' பண்ணியிருந்தால் அதைப்பற்றிச் சொன்னால் நன்றாக இருக்கும்.

அரசாங்க மருத்துவ மனை (கரம்பக்குடி)

* 448 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் சுகாதார அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கரம்பக்குடி நகரப் பஞ்சாயத்தில் உள்ள அரசாங்க மருத்துவ விடுதியில் பிரசவ விடுதி ஏற்படுத்துவது சம்பந்தமாக மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் மூலம் விண்ணப்பம் வந்ததா ?

(இ) அப்படியானால் அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக் கப்பட்டது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) எழாது.